



# முன்னுரை

இந்த நூல் வெளிவரும்போது அறுபது வயது நிறையும் நான், என் முதல் முப்பது வருடங்களில் நினைத்த இரண்டு விஷயங்கள் நடக்கவே இல்லை.

என் வாழ்க்கையில் ஒரு போதும் எந்த பெரிய நோயும் எனக்கு வராது என்றும் மருத்துவமனையில் தங்கி அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளவேண்டிய தேவையே எனக்கு ஏற்படாது என்றும் அப்போது நம்பியிருந்தேன்.ஆனால் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், குடல் காச நோய், மூல நோய், ஒற்றைத் தலைவலி, ஜீரணக் கோளாறுகள், கழுத்தெலும்பு, முதுகெலும்பு தேய்வு நோய்கள் என்று வரிசையாகவும் ஒரே சமயத்திலுமாகப் பல நோய்களுக்கு தொடர்ந்து அடுத்த முப்பது வருடங்களில் ஆளானேன். கண் அறுவை சிகிச்சையில் தொடங்கி, இதயத்தில் ஸ்டெண்ட் வைப்பது, இரு பகுதிகளில் குடலிறக்க அறுவை சிகிச்சை, சிறுநீரகக் குழாயில் ஸ்டெண்ட் பொருத்துவது, கல் நீக்க ஒலிஅலை சிகிச்சை என்று பலமுறை மருத்துவமனையில் தங்கும் நிலை வந்தது.

நான் எந்த வெளிநாட்டுக்கும் செல்லும் வாய்ப்போ அவசியமோ எனக்கு வாழ்க்கையில் இராது என்று இளமையில் உறுதியாக நினைத்தேன். அதுவும் பலிக்கவில்லை.

1994ல் இந்திய அரசு என்னை ஆஸ்திரேலியாவில் நடக்கும் இந்திய கலைவிழாவுக்கு பிரதிநிதியாக செல்லும்படி கேட்டது. அப்போது என்னிடம் பாஸ்போர்ட் கூட கிடையாது. புறப்படுவதற்கு

இரு தினங்கள் முன்னர் அரசு எனக்கு விசேட தற்காலிக டிப்ளமேட் பாஸ்போர்ட் அளித்து அனுப்பிவைத்தது. என்னுடன் மூன்று பெண் எழுத்தாளர்கள் வந்தனர். ஆஸ்திரேலிய அனுபவங்களை விரிவாகக் கட்டுரைகளாக இதுவரை எழுதவில்லை. ஆஸ்திரேலிய டி.வி நிகழ்ச்சிகள் பற்றி மட்டும் அப்போது நான் ஆசிரியராக இருந்த 'டி.வி.உலகம்' இதழில் எழுதினேன். அடுத்த வெளிநாட்டுப் பயணமாக 1998ல் நேபாளத்தின் காட்மாண்டுவுக்குச் சென்றேன். சஸெக்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் டேவிட் பேஜ், வில்லியம் கிராலீ ஆகியோர் தெற்காசியாவில் டி.வி ஒளிபரப்புகளின் நிலை பற்றி செய்த ஆய்வுக்கான ஆய்வுக் குழுவில் தமிழக உறுப்பினராக அப்போது சிறிது காலம் பணியாற்றினேன். அதற்காக காட்மாண்டு சென்றேன்.

பின்னர் பத்தாண்டுகள் கழித்து 2009ல் சிங்கப்பூருக்கு தமிழ் மன்ற நிகழ்ச்சியில் பேசச் சென்றேன். அப்படியே மலேசியா சென்று நண்பர்கள் கோகிலா-சரவணன் குடும்பத்துடன் சில தினங்களைக் கழித்தேன். அமெரிக்காவில் இருக்கும் நண்பர் அருள் அழைப்பின்பேரில் 2010ல் அமெரிக்கப் பயணம். அந்த அனுபவங்கள் அடிப்படையிலான கட்டுரைகள்தான் இந்த நூல். தினமணி கதிரில் 24 அத்தியாயங்கள் வரை தொடராக வந்தது. அத்தோடு முடிக்கச் சொல்லிவிட்டார்கள். மீதி 10 அத்தியாயங்களை மூன்று வருடம் கழித்து எழுதி இப்போது நூலாக்கியிருக்கிறேன்.

2013தான் மிக அதிகமான வெளிநாட்டுப் பயணங்கள். மிக அதிகமான மருத்துவமனை விஜயங்கள். வருட ஆரம்பத்தில் நண்பர் சிதம்பரம் பழநியின் அழைப்பில் அவர் குடும்பத்துடன் பாலி தீவுகளுக்கும் சிங்கப்பூருக்கும் சென்றேன். அதையடுத்துத் திரும்பவும் சிங்கப்பூரில் தங்கமீன் வாசகர் வட்டம் நடத்திய பயிலரங்கை நடத்தித் தரச் சென்றேன். சிங்கப்பூரிலிருந்து நண்பர் சரவணன் விவேகானந்தனுடன் கம்போடியா சென்று புகழ் பெற்ற ஆங்கோர் வாட் கோவில் சிதைவுகளைக் கண்டு வந்தேன். அடுத்து 45 நாட்கள் பயணமாக ஐரோப்பாவில் பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இத்தாலி, வியன்னா, ஜெர்மனி, ஆம்ஸ்டர்டேம், பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் போனேன். அந்த அனுபவங்கள் பற்றி கல்கி இதழில் தொடராக எழுத ஆரம்பித்தேன். எட்டு வாரங்கள் ஆனதும் , பயண அனுபவம் போதும்; வழக்கம் போல அரசியல் விமர்சனமே எழுதுங்கள் என்றார்கள். மொத்த ஐரோப்பிய அனுபவம் பற்றியும் அங்கே சந்தித்த அருமையான நண்பர்கள் பற்றியெல்லாம் எண்பது தொண்ணூறு அத்தியாயங்கள் வரக்கூடிய தனி நூல்தான் எழுதவேண்டும். அதற்கு இன்னும் எனக்கு எத்தனை வருடம் ஆகுமோ தெரியாது

*! கல்கியில் வெளியான பாரீசில் ஆறு தினங்களின் அனுபவங்கள் பற்றிய எட்டு கட்டுரைகளை மட்டும் 'பாரீசுக்குப் போ(னேன்)!" என்ற தலைப்பில் இந்த நூலில் இணைத்திருக்கிறேன்.*

*திரும்பி வந்ததும் அடுத்து ஆஸ்திரேலியாவுக்கு செல்ல திட்டமிட்டிருந்தேன். ஆனால் சென்னை திரும்பியதும் என் சிறுநீரகப் பிரச்சினையால் உடல் நலிவடைந்து தொடர்ந்து சிகிச்சைக்கு மருத்துவமனைகளுக்கு பல முறை சென்று தங்குவதாகிவிட்டது. எனவே 2014 இறுதியில் ஆஸ்திரேலியா போகலாம் என்று நினைக்கிறேன்.*

*மருத்துவமனைகளுக்கும் வெளிநாடுகளுக்கும் போய் வருவது இப்போது பழகிப்போய்விட்டது. இனி வரும் நாட்களில் இன்னும் அதிகமாக வெளி நாடுகளுக்கும், குறைவாக மருத்துவமனைகளுக்கும் செல்வேன் என்று நம்புகிறேன். இந்த வருட இறுதியில் ஆஸ்திரேலியா செல்ல விரும்புகிறேன். தவிர சீனா, இலங்கை, கியூபா, நெதர்லாண்ட்ஸ் என்று நான் செல்ல விரும்பும் நாடுகளின் பட்டியல் நீள்கிறது.*

*இந்த நூலைப் பற்றி எனக்கு ஒரே ஒரு வருத்தம் உண்டு. நான் எடுத்த ஆயிரக்கணக்கான புகைப்படங்களில் ஒரு நூறையேனும் இத்துடன் அச்சிட்டு வெளியிடமுடியவில்லையே என்ற குறைதான் அது. நூலை வாசிக்கும்போது நீங்களும் பல அம்சங்களுக்குக் கூடப் படங்கள் இருந்திருக்கலாமே என்றே நினைப்பீர்கள். அப்படி ஒரு பதிப்பை மலிவான விலையில் வெளியிடும் தொழில்நுட்பம் நமக்கு இல்லை. தமிழ்ப் பதிப்பு வாசகச் சூழலில் அதிக விலையில் நூல்களை வெளியிடுவதும் எனக்கு விருப்பமில்லை. ஒருவேளை உடனடி எதிர்காலத்தில் மின்நூல்கள் டிஜிட்டல் நூல்கள் பரவும் வாய்ப்பு ஏற்பட்டால், இந்தக் குறை தீரும். சினிமா தயாரிப்பை டிஜிட்டல் கேமரா விலைமலிவாக்கியது போல புத்தகங்களையும் மின்டிஜிட்டல் முறை விலைமலிவாக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.*

*உலகம் முழுவதும் சென்று பார்க்கப் பார்க்க என்னுடைய சில பழைய கருத்துகள் வலுப் பெறுகின்றன. தேசம், ஊர், சாதி, மதம், இனம், அரசு என்பதெல்லாம் மனிதர்களாக வகுத்துக் கொண்ட கோடுகள் மட்டும்தான். அவற்றைக் கடந்து சிந்திக்க முடிந்தால் மட்டுமே அற்புதமான ஓர் உலகை நாம் உருவாக்க முடியும். முதலில் அப்படி சிந்திக்க விடாமல் நம்மை தடுக்கும் சக்திகளையெல்லாம் அடையாளம் கண்டு விலக்க வேண்டும். அப்படிப்பட்ட உலக மனிதனாக நாம் மாறத் தூண்டும் ஒரு சிறு கருவியாக இந்த நூல் பயன்பட்டால் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். இந்திய அரசுடனும் அமெரிக்க அரசுடன் நமக்கு நிறைய*

*வேறுபாடுகள் இருக்கலாம். இருக்கின்றன. இந்திய மக்களுடனும் அமெரிக்க மக்களுடனும் இருக்கத் தேவையில்லை என்பதே என் பார்வை என்ற அடிப்படையில் இந்த நூலை வாசியுங்கள். நன்றி.*

***அன்புடன்***
***ஞாநி***

எப்போதும் போல் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் கழித்த இன்னொரு நாளில். ஜனவரி 2014.

**இந்த நூல்**

தமிழ்நாட்டைத் தவிர வேறு வெளியூரையே பார்த்திராதபோதும் உலகத்தை எனக்குப் புரியவைத்த அம்மாக்கள் பங்காரு, ஜெயலட்சுமிக்கும் பெரியம்மா கனகாவுக்கும்